www.tamilarangam.net

# ஸ்ரீலங்கா அரசின் நாசகாரச் சதி

## மத மோதலைத் தூண்டி மக்களைப் பிளவு படுத்தும் முயற்சி

ஈழத்துத் தமிழ் பேசும் மக்களிடையே பிளவை ஏற்படுத்தி, எமது விடுதலைப்போராட்டத்தை திசை திருப்பும் நோக்கத்தோடு ஸ்ரீலங்காஅரசு மத அடிப்படையில் மோதல்களைத் தூண்டி வருகின்றது. கடந்த சில நாட்களாக இலங்கையின் கிழக்குப் பகுதிகளில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் சிங்கள இனவாத அரசின் நாசகார சதி முயற்சியால் உருவாக்கப் பட்டவையாகும். இஸ்ரேலிய உளவு ஸ்தாபனமாகிய 'மொசாட்'டின் சதியாலோசனையோடு இந்நாசகாரத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிரேம். இஸ்லாமின் விரோதியான இஸ்ரேலுடன் கை கோர்த்துக் கொண்டிருக்கும் சிறிலங்கா அரசு ஈழ விடுதலைப் போராளிகளை முஸ்லீம் மக்களுக்கு எதிரானவர்கள் என்ற ரீதியில் விசமப் பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகின்றது.

இஸ்லாமிய சமூகத்திலிருந்து எம்மை அந்நியப்படுத்தும் நோக்கில் கட்டவிழ்த்து விடப்படும் இந்தப் பிரச்சாரம் அபாண்டமானதோடு மிகவும் கேலிக் கூத்தானதாகும்.

விடுதலை இயக்கங்களின் ஆக்கபூர்வமான முயற்சிகளால் முஸ்லீம் மக்களுக்கும் ஏனைய தமிழ் பேசும் மக்களுக்கும் இடையே உறவுகள் வலுப்பெற்று வந்தன. முஸ்லீம் மக்களிடமிருந்து விடுதலைப் போராட்டத்திற்கு மேலும் மேலும் ஆதரவு திரண்டு வந்தது. இதனைக் கண்டு ஸ்ரீலங்கா ஆட்சியாளர்கள் திகிலடைந்தனர். இஸ்ரேலுடன் ஸ்ரீலங்கா அரசு நட்புறவு கொண்டமையால் ஆத்திரமடைந்த அரபு நாடுகள் தமது உதவியை நிறுத்தி வருகின்றன. பரந்துபட்ட முஸ்லீம் மக்களிடையே வளர்ந்து வரும் 'சியோனிச' எதிர்ப்புணர்வை திசைதிருப்புவதற்கும் எமது விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவதற்கும் முஸ்லீம் நாடுகளில் இருந்து உதவிகளைப் பெறுவதற்குமாகவே சிங்கள பெளத்த இனவாத அரசு திட்டமிட்டு இந்த மோதல்களைத் தூண்டி வருகின்றது.

கடந்த வருடம் ஸ்ரீலங்கா அரசு எமது போரட்டத்தை நசுக்கும் நோக்குடன் இஸ்ரேலிய உதவியை நாடி இராஜ தந்திர உறவை ஏற்படுத்திய போது முஸ்லீம் மக்கள் அதற்கெதிராக கிளர்ந்தெழுந்தனர். கிழக்கிலங்கையில் பரவலாகப் போராட்டம் வெடித்தது. இதை சகித்துக் கொள்ள முடியாத சிங்கள ஆட்சியாளர் அடக்குமுறை மூலம் அப்போரட்டங்களை மிருகத்தனமாக நசுக்க முயன்றனர் என்பதை முஸ்லீம் மக்கள் நன்கறிவர்.

பாலஸ்தீன மக்களின் நிலங்களை அபகரித்து, அவர்களை அகதிகளாக்கி மனிதகுலத்தின் வெறுப்புக்கு ஆளாகியுள்ள இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளருடன் ஸ்ரீலங்கா அரசு கூடிக்குலாவுகின்றது. பாலஸ்தீன மக்களின் விடுதலைப்போராட்டத்தை உறுதியாக ஆதரித்துவரும் தமிழீழ விடுதலைப்போராளிகளை முஸ்லீம் மக்களுக்கு எதிரான வன்முறையாளர்கள் என்று சித்தரிக்க முயற்சிக்கும் சிங்கள அரசின் சதித்திட்டம் ஒருபோதும் வெற்றிபெறப் போவதில்லை. மதஅடிப்படையில் தமிழ் பேசும் மக்களைப் பிளவு படுத்த ஸ்ரீலங்கா அரசு மேற்கொள்ளும் சதி முயற்சிகளுக்கு பலியாகாது விழிப்பாக இருக்குமாறு நாம் தமிழ் பேசும் மக்களைக் கேட்டுக்கொள்கிரேம்.

மதவேறுபாட்டுணர்ச்சியின்றி ஈழத் தமிழ்பேசும் மக்களிடையே காலம் காலமாக நிலவிவரும் பிரிக்கமுடியாத உணர்வுகளை தொடர்ந்தும் பேணிப்பலப்படுத்தி எமது விடுதலையை வென்றெடுக்க உறுதியுடன் செயற்படுவோமாக.

தமிழீழ விடுதலை இயக்கம் (TELO)

தமிழீழ விடுதலைப் புலிகள். (LTTE)

ஈழப் புரட்சி அமைப்பு (EROS)

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்